**செய்தி வெளியீடு எண் :2311** **நாள் : 20.12.2022**

**மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் திரு. இ.பெரியசாமி அவர்கள் தலைமையில், இன்று (20.12.2022) பனகல் மாளிகை கட்டட கூட்டரங்கில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் திட்டங்களின் பணிமுன்னேற்றம் குறித்து கூடுதல் ஆட்சியர்கள்/திட்ட இயக்குநர்கள் மற்றும் செயற்பொறியாளர்களுக்கான ஆய்வுக்கூட்டம் நடைபெற்றது.**

**மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் திரு. இ.பெரியசாமி அவர்கள் தலைமையில்,** இன்று (20.12.2022) **ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநரக பனகல் மாளிகை கட்டட கூட்டரங்கில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் திட்டங்களின் பணிமுன்னேற்றம் குறித்து கூடுதல் ஆட்சியர்கள்/திட்ட இயக்குநர்கள் மற்றும் செயற்பொறியாளர்களுக்கான ஆய்வுக்கூட்டம் நடைபெற்றது.**

**புதிய பள்ளிக் கட்டடங்கள் கட்டுதல்**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் விதி எண் 110-ன்கீழ் வெளியிட்டஅறிவிப்பின்படி ஊராட்சி ஒன்றிய தொடக்க மற்றும் நடுநிலைப்பள்ளிகளுக்கு ரூ.800 கோடி மதிப்பீட்டில் புதிய வகுப்பறைகள் கட்ட அரசாணை மற்றும் நிதி ஒதுக்கீடு பெறப்பட்டுள்ளது. இப்பணிகளுக்கு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டு ஒப்பந்தப்புள்ளி இறுதி செய்து பணிகள் விரைவில் தொடங்க மாண்புமிகு அமைச்சர் அவர்களால் அறிவுறுத்தப்பட்டது.

**பள்ளி உட்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டம்**

2021-22 ஆம் ஆண்டில் பள்ளி உள்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டத்தின் (SIDS) கீழ் அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் (AGAMT) செயல்படுத்தப்படும் கிராமப்புரங்களில் அமைந்துள்ள ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளிகள் மற்றும் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளிகளில் தற்போதுள்ள பள்ளிக் கட்டிடங்கள்/வகுப்பு அறைகள், பள்ளிக் கழிவறைகள் (இருபாலர்), சமையலறைக் கூடங்கள் மற்றும் தண்ணீர் வசதிகளை பழுதுபார்த்தல் மற்றும் புனரமைத்தல்

பணிகளை மேற்கொள்ள ரூ.115.78 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, இதுவரை 8,952 பணிகள் எடுக்கப்பட்டு 2313 பணிகள் முடிக்கப்பட்டுள்ளது. மீதமுள்ள பணிகள் 31.03.2023–க்குள் முடிக்க அறிவுறுத்தப்பட்டது.

**பிரதம மந்திரி கிராம சாலைத் திட்டம்**

பிரதம மந்திரி கிராம சாலைத் திட்டத்தின் கீழ், 2022–23 ஆண்டு, ஒன்றிய அரசால் தமிழ்நாட்டிக்கு 1000 கி.மீ நீளமுள்ள சாலைப் பணிகள் ரூ.533 கோடி மதிப்பீட்டில் முடிக்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டு, இதுவரை 557 கி.மீ நீளமுள்ள சாலைப் பணிகள் முடிக்கப்பட்டுள்ளது. மீதமுள்ள 443 கி.மீ நீளமுள்ள சாலைப் பணிகள் இந்த நிதியாண்டில் முடிக்க நடவடிக்கை எடுக்க அறிவுறுத்தப்பட்டது.

**தமிழ்நாடு ஊரகச் சாலைகள் மேம்பாட்டுத் திட்டம்**

தமிழ்நாடு ஊரகச் சாலைகள் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் 2021–22 ஆம் ஆண்டிற்கு ரூ.627 கோடி மதிப்பீட்டில் 1274 சாலைப் பணிகள் எடுக்கப்பட்டு இதுவரை 613 சாலைப் பணிகள் முடிக்கப்பட்டுள்ளது. மீதமுள்ள 661 சாலைப்பணிகள் பிப்ரவரி 2023–க்குள் முடிக்க அறிவுறுத்தப்பட்டது.

**மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டம்**

மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின் கீழ் 2022–23 ஆம் ஆண்டிற்கு 22 கோடி மனித சக்தி நாட்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டதில் 20.12.2022 வரை 23.24 கோடி மனித சக்தி நாட்கள் (106%) எய்தப்பட்டுள்ளது. இதற்கான செலவினமாக ரூ.8107.43 கோடி மேற்கொள்ளப்பட்டுள்ளது.

நடப்பாண்டில் 3.03 இலட்சம் பணிகள் எடுக்கப்பட்டு அதில் 1.32 இலட்சம் பணிகளும் 2.79 இலட்சம் நிலுவை பணிகளுமாக சேர்த்து மொத்தம் 4.11 இலட்சம் பணிகள் இதுவரை முடிக்கப்பட்டுள்ளன. நிலுவையிலுள்ள பணிகள் அனைத்தும் இந்நிதியாண்டிற்குள் செய்து முடிக்க அறிவுறுத்தப்பட்டது.

**அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் –II**

அனைத்து குக்கிராமங்களும் சமூக மற்றும் பொருளாதார வளர்ச்சியினை முழுமையாக அடைவதை உறுதி செய்யும் பொருட்டு, தற்போது அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டம்–II மீண்டும் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

2021–22–ம் ஆண்டு முதல் 2025–26–ம் ஆண்டு முடிய ஐந்து ஆண்டுகளில் இத்திட்டம் அனைத்து கிராமங்களிலும் படிப்படியாக நிறைவேற்றப்படும்.

2021–2022 ஆம் ஆண்டு ,388 ஊராட்சி ஒன்றியங்களிலும் முதற்கட்டமாக 2657 ஊராட்சிகள் தேர்வுசெய்யப்பட்டு ரூ.1455 கோடி மதிப்பீட்டில் திட்டப் பணிகள் செயல் படுத்தப்பட்டுள்ளது.

2022–2023 ஆம் ஆண்டு ,388 ஊராட்சி ஒன்றியங்களிலுள்ள 2544 ஊராட்சிகளில் ரூ.1155 கோடி மதிப்பீட்டில் திட்டப் பணிகள் செயல் படுத்தப்படுகிறது

**ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கு நிதி விடுவித்தல்**

ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கு 2021–22 ஆம் ஆண்டு மாநில நிதிக்குழு மானியமாக ரூ2367.45 கோடி கிராம ஊராட்சிகளுக்கும், **ரூ. 1592.65 கோடி** வட்டார ஊராட்சிகளுக்கும், ரூ.344.35 கோடி மாவட்ட ஊராட்சிகளுக்கும் ஆக மொத்தம் ரூ. 4304.45 கோடி அரசால் விடுவிக்கப்பட்டு ஊராட்சிகளுக்கு விடுவிக்கப்பட்டுள்ளது. முக்கியமாக, ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கு கடந்த 2019–20 மற்றும் 2020–21 ஆம் ஆண்டுகளில் வழங்கப்பட்ட பகிர்மான நிதியைக்காட்டிலும் 447 கோடி அதிகமாக 2021–22 ஆம் ஆண்டில் வழங்கப்பட்டுள்ளது. மேலும் 2022–23 ஆம் ஆண்டின் அக்டோபர் மாதம் வரை ரூ...2629.49 கோடி ரூபாய் மானிய நிதியாக வழங்கப்பட்டு உள்ளது.

இது தவிர, உள்ளாட்சி அமைப்புகளுக்கு தேர்தல் நடத்தப்படாத காரணத்தினால் விடுவிக்கப்படாமல் இருந்த ஒன்றிய நிதி குழு மானிய

நிதியானது, இவ்வரசு பதவியேற்றப்பட்டவுடன் உரிய நேரத்தில் தேர்தல்கள் நடத்தியதுடன் இதர நிபந்தனைகளையும் நிறைவேற்றியதன் காரணமாக எவ்வித நிலுவையிமின்றி 2022-23 ஆம் ஆண்டிற்கான முதல் தவணை வரையிலான நிதி ரூ.1335.50 கோடி முழுமையாக ஊரக உள்ளாட்சி அமைப்புகளும் பெறப்பட்டுள்ளது.

**பிரதம மந்திரி குடியிருப்புத் திட்டம் (ஊரகம்)**

பிரதம மந்திரி குடியிருப்புத் திட்டம் (ஊரகம்) கீழ் 2022-23-ஆம் ஆண்டிற்கு 3,02,812 வீடுகள் கட்ட இலக்கு நிர்ணயிக்கப்பட்டு இதுவரை 1,26,696 வீடுகள் கட்டப்பட்டுள்ளது. மீதமுள்ள வீடுகள் 31.03.2023-க்குள் கட்டி முடிக்கப்படும். இத்திட்டத்தில் ஒன்றிய மற்றும் மாநில அரசுகள், திட்ட செலவினத்தை 60:40 என்ற விகிதத்தில் மேற்கொள்கின்றன. கடந்த ஆண்டில் பெறப்படவேண்டிய நிலுவைத் தொகை உட்பட 2022-ஆம் ஆண்டில் பெறப்பட்ட மொத்த தொகையாகிய ரூ.2597.47 கோடியில் இதுவரை திட்ட பயன்பாட்டிற்காக ரூ.2157.47 கோடி செலவிடப்பட்டுள்ளது.

**ஜல் ஜீவன் இயக்கம்**

ஊரகப்பகுதிகளில் அனைத்து வீடுகளுக்கும் குடிநீர் இணைப்பு வழங்க ஜல் ஜீவன் இயக்கம் செயல்படுத்தப்படுகிறது.

தமிழ்நாட்டில் ஊரக பகுதிகளிலுள்ள 1,25,01,803 வீடுகளில் நாளது வரை 72,89,430 வீடுகளுக்கு குடிநீர் குழாய் இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளது, மீதமுள்ள 52,12,373 வீடுகளுக்கு குடிநீர் குழாய் இணைப்புகள் மார்ச் 2024 ஆம் ஆண்டிற்குள் வழங்கப்பட உள்ளன.

2022-23 ஆம் ஆண்டில் 12,50,000 இணைப்புகள் வழங்க திட்டமிடப்பட்டு இதுவரை 19,90,396 குடிநீர் குழாய் இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளன.

**தூய்மை பாரத இயக்கம் (ஊரகம்)**

தூய்மை பாரத இயக்கம் (ஊரகம்) திட்டத்தின் கீழ் ஏற்கனவே பயன் பெறாத நபர்கள் பயன் பெறும் வகையில் , 2021-22 ஆம் ஆண்டில் கூடுதலாக 44,858

புதிய தனி நபர் இல்லக் கழிப்பறைகள், ரூ.53.83 கோடி செலவில் கட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது .

2022-23 நிதியாண்டில் 1,55,830 புதிய தனி நபர் இல்லக் கழிப்பறைகள் கட்டப்படவுள்ளது. அதேபோல், தூய்மை பாரத இயக்கம் (ஊரகம்) பகுதி இரண்டு திட்டத்தின் கீழ், 4,481 சமூக சுகாதார வளாகங்கள், 15வது நிதிக்குழு மானியம் மற்றும் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதியளிப்பு திட்டத்துடன் ஒருங்கிணைத்து 235.25 கோடி செலவில் கட்டப்பட்டு வருகின்றன. இதில், தனி நபர் இல்லக் கழிப்பறைகள் கட்ட இடம் இல்லாத பழங்குடி/பட்டியலினத்தவர் (SC/ST) குடும்பங்களுக்கும், புலம்பெயர்ந்த / வந்து செல்லும் மக்களுக்கும் கட்டப்படவுள்ளது . 2022-23 ஆம் ஆண்டில், பொது இடங்கள் மற்றும் நூலகங்கள், பள்ளிகள் மற்றும் அரசு கட்டிடங்கள் போன்றவற்றின் அருகில் 1,500 சிறிய அளவிலான சமுதாய சுகாதார வளாகங்கள் கட்டும் பணிகள் தேர்வுசெய்யப்பட்டுளக்குள் முடிக்க 2023 இப்பணிகள் அனைத்தும் மார்ச் .ன அறிவுறுத்தப்பட்டது

**சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத்திட்டம்**

2021-22ஆம் ஆண்டில் 9,480 பணிகள் எடுக்கப்பட்டு இதுவரை 4,549 பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. மீதமுள்ள 4,931 பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன.

2022-23 ஆம் ஆண்டில் இத்திட்டத்தை செயல்படுத்துவதற்காக அரசாணை (நிலை) எண்.107, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் (மா.அ.தி.1) துறை நாள்.26.09.2022 வாயிலாக அரசு உத்திரவுகளை பிறப்பித்து, ரூ.702 கோடியில் 50 சதவீதம் முதல் தவணைத் தொகையாக ரூ.352.50 கோடி அனைத்து மாவட்டங்களுக்கும் விடுவிக்கப்பட்டது.

**பாராளுமன்ற உறுப்பினர் உள்ளூர் பகுதி மேம்பாட்டுத் திட்டம்.**

2019-20 மற்றும் 2021-22ஆம் நிதி ஆண்டில் இத்திட்டத்தின் கீழ் 4,664 பணிகள் எடுத்துக்கொள்ளப்பட்டு, இதுவரை 3,601 பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. மீதமுள்ள 1,063 பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன

**பயிற்சி உதவி .இயக்குநர்களுக்கு ஆணை வழங்குதல்**

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் மூலம் ஊரக வளரச்சி மற்றும் ஊராட்சித் துறைக்கு நேரடி நியமனம் வழி தேர்ச்சிபெற்ற 4 பயிற்சி உதவி இயக்குநர்களுக்கு பயிற்சி மற்றும்பணி நியமன ஆணை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வழங்கினார்கள்

ஊரகப்பகுதிகளில் உள்ள அனைத்து மக்களுக்கும் குடிநீர், தெருவிளக்கு, சாலைப்பணிகள் உட்பட அரசின் வளர்ச்சித் திட்டங்கள் உரிய நேரத்தில் சென்றடையும் வகையில் கூடுதல் ஆட்சியர்(வளர்ச்சி) / திட்ட இயக்குநர்கள் மற்றும் செயற்பொறியாளர்கள் சிறப்பு கவனம் செலுத்தி முனைப்புடன்பணியாற்றிடவேண்டும் என மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவுரை வழங்கினார்கள்.

இக்கூட்டத்தில், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையர் மரு.தாரேஸ் அகமது, இ.ஆ.ப., துறையின் கூடுதல் இயக்குநர்கள், தலைமைப் பொறியாளர் மற்றும் உயர் அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in